தமிழ் இணையக் கல்விக்கழகம்
**TAMIL VIRTUAL ACADEMY**

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG20 - நிலை II - (Grade II)**

நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)
நவம்பர், திசம்பர் - 2015

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 75

பகுதி - அ

**I** எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. வடலூரர் வள்ளலார் என அழைக்கப் பெற்றவர் யார்?
2. உலகப் பொதுமறை என்று அழைக்கப்பெறும் நூல் எது?
3. கம்பர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?
4. சிவனையும் முருகனையும் வணங்குபவர்கள் யார்?
5. பெரியார் என்று உலக மக்களால் அழைக்கப் பெறுபவர் யார்?
6. உலகில் சிறந்த மலர் எது என்று அமைச்சர் நலம்விரும்பி கூறினார்?
7. புதுக்கோட்டை எங்குள்ளது?
8. அளபெடை எத்தனை வகைப்படும்?
9. நிலைமொழியும் வருமொழியும் சேர்வதை எவ்வாறு அழைப்போம்?
10. வெண்பாவிற்கு உரிய ஓசை எது?

பகுதி - ஆ

**II** எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. இராமலிங்க அடிகள் வடலூரர் வள்ளலார் என அழைக்கப்பெறக் காரணம் யாது?
2. திருக்குறளின் முப்பிரிவுகள் யாவை?
3. வானவர்கள் உண்ணும் அமுதத்தைவிடச் சிறந்தவையாக இராமன் கூறுவன யாவை?
4. இரட்டுற மொழிதல் கூறும் ஊரின் சிறப்பு யாது?
5. உலகத்தில் அழிய வேண்டுவனவாக பாரதிதாசன் கூறுவன யாவை?
6. குலசேகர ஆழ்வார் எத்தகைய பேற்றினை விரும்புகிறார்?
7. இந்தியத் தந்தை என்று போற்றப் பெறுபவர் யார்?
8. குகைக் கோயில் மண்டபத்தில் வலதுபுறத்தில் உள்ள ஓவியம் எது?
9. தொடர் வண்டிக்கு எஞ்சின் எது போன்றது?
10. இல்லையென்று வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாது கொடுப்பவர் யார்?
11. பெரியார் எத்தனை வகையானப் பதவிகளை ஒரே நேரத்தில் வகித்தார்?
12. குறுக்கங்கள் யாவை?
13. தொழிற்பெயரின் இரு நிலைகளைக் கூறுக?
14. சீர்களின் வகைகள் யாவை?
15. மூவகைப் பொருள்கள் எவை?

## பகுதி - இ

**III** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் **விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. எல்லாரும் ஒன்றாக இணைந்து வாழ்வதற்கு கண்ணதாசன் தரும் கருத்துகளை எழுதுக.
2. கலிங்கத்துப் பரணி-நூற்குறிப்பு எழுதுக.
3. அ.மு.பரம சிவானந்தம் இயேசுவை எவ்வாறு வாழ்த்துகிறார்?
4. பெரியாரைப்பற்றி அண்ணா எவ்வாறு கூறுகிறார்?
5. தாமரைக்குளம் ஓவியம் குறித்து எழுதுக.
6. பறக்கும் தொடர்வண்டி என்பது என்ன?
7. தொழிற்பெயருக்கும் வினையால் அணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
8. வெண்பாவின் பொது இலக்கணத்தை விளக்குக.

## பகுதி - ஈ

**IV** ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் **விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. கல்வி என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. மகதநாட்டு மன்னன் மரகதவர்மனின் செயல்கள் யாவை?
3. நிரல்நிறை அணி, வஞ்சப் புகழ்ச்சி அணி ஆகிய இரு அணிகளையும் சான்று தந்து விளக்குக.

## பகுதி - உ

**V** ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.
**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

**1.** பாரதியார் பற்றியும், பெண்ணடிமை நீங்க அவர் கூறிய கருத்துகளையும் **தொகுத்து எழுதுக.**
2. பாரியும் கபிலரும் கண்ட கலைவிழாவினை விவரிக்க.